திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்:திரு.ச.செல்வபாலாஜி.பி.இ.

ந.க.எண்.0372/2026/எப்1 **நாள்:28.01.2026**

பொருள்: மனை உட்பிரிவு – திருவண்ணாமலை மாநகராட்சி – புதியதாக இணைக்கப்பட்ட வேங்கிக்கால் ஊராட்சி – வேங்கிக்கால் வருவாய் கிராமம் – புல எண்.168/1A1B– யில் 0.94.33 ஹெக்டேர் (2.33 ஏக்கர்) பரப்பளவு கொண்ட நிலத்தை –மனை உட்பிரிவு ஒப்புதல் அளித்தல் – தொடர்பாக.

பார்வை:

1. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, திருவண்ணாமலை அவர்களின் தொழில் நுட்ப அனுமதி கடிதம் ந.க.எண். DV26NMJ7/2025/TCP, நாள்.25.08.2025.
2. திரு.S.சாய்பிரசன்னா திருவண்ணாமலை அவர்களின் விண்ணப்பம் நாள். 13.01.2026.
3. அரசாணை (நிலை) எண்.141 (வீட்டு வசதித்துறை), நாள்.16.07.2022.
4. இணை சார் பதிவாளர், திருவண்ணாமலை அவர்களின் அலுவலக ஆவண எண். 7808/2025.
5. திருவண்ணாமலை மாநகராட்சி கருவூல பற்றுச் சீட்டு எண்.040/TM6/1/25 – 26/0014676& 040/TM6/1/25 – 26/0015036நாள்.21.01.2026, 22.01.2026.

******

உத்தரவு:

திருவண்ணாமலை மாநகராட்சி எல்லைக்குப்பட்ட புதியதாக இணைக்கப்பட்ட வேங்கிக்கால் ஊராட்சி வேங்கிக்கால் வருவாய் கிராமம் – புல எண்.168/1A1B– யில் 0.94.33 ஹெக்டேர் (2.33 ஏக்கர்) பரப்பளவு கொண்ட நிலத்தை 56 மனைகளாக உட்பிரிவு செய்ய, பார்வை 1–ல் காணும் கடிதத்தில், உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, திருவண்ணாமலை அவர்களின் தொழில்நுட்ப அனுமதி பெற்று, பார்வை 2–ல் காணும் விண்ணப்பத்தில் திரு.சாய்பிரசன்னா, அவர்கள் கோரியுள்ளார்.

தொடர் நடவடிக்கையாக, பார்வை 5–ல் காணும் இம்மாநகராட்சியில் கருவூலப் பற்றுச் சீட்டு எண்.040/TM6/1/25 – 26/0014676& 040/TM6/1/25 – 26/0015036 மூலம், உட்பிரிவு மற்றும் பராமரிப்பு கட்டணமாக ரூ.16,42,546/–

(பதினாறு லட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து ஐந்நூற்று நாற்பத்தாறு மட்டும்) மனை உரிமையாளரால் செலுத்தப்பட்டுள்ளது. பார்வை 4–ல் காணும் இணை சார்பதிவாளர், திருவண்ணாமலை அவர்களின் அலுவலக ஆவண மூலம், மேற்படி உட்பிரிவிற்காக, உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு, திருவண்ணாமலை அவர்களின் தொழில்நுட்ப அனுமதியில் ஒதுக்கப்பட்ட நிலையிலுள்ள சாலை மாநகராட்சி ஆணையாளருக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, திருவண்ணாமலை மாநகராட்சி எல்லைக்குப்பட்ட புதியதாக இணைக்கப்பட்ட வேங்கிக்கால் ஊராட்சி – வேங்கிக்கால் வருவாய் கிராமம் – புல எண்.168/1A1B– யில் 0.94.33 ஹெக்டேர் (2.33 ஏக்கர்) பரப்பளவு கொண்ட நிலத்தை 56 மனைகளாக உட்பிரிவு செய்ய 01 முதல் 56 வரை என எண்ணிட்டு பார்வை 1–ல் காணும், உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு திருவண்ணாமலை அவர்கள் அளித்துள்ள தொழில்நுட்ப அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புதல் அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

R. Vijayan

ஆணையாளர்,
திருவண்ணாமலை மாநகராட்சி.

பெறுநர்:–

திரு.சாய்பிரசன்னா,
எண்.10, ராஜராஜன் தெரு,
திருவண்ணாமலை.

திருவண்ணாமலை மாநகராட்சி

நகல்:–

1. வட்டாட்சியர், திருவண்ணாமலை.
2. இணை சார்பதிவாளர், திருவண்ணாமலை.
3. வருவாய் ஆய்வாளர், திருவண்ணாமலை மாநகராட்சி.
4. The Chairman, Tamil Nadu Real Estate Regularity Authority,
   No.1A, CMDA Tower II, 1st Floor, Egmore, Chennai –08.